பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 06 செவ்வாய்க்கிழமை 19.04.2022 கதிர் 59

## கோதுமை மாவின் விலை 40 ரூபாவால் அதிகரிப்பு

நாட்டில் அத்தியாவசிப் பொருள்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. அந்தவகையில்கோதுமைமாவின்விலையை பிறீமா நிறுவனம் அதிகரித்துள்ளது.

அதனடிப்படையில், ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 40 ரூபாவால் அதி கரிக்கப்பட்டுள்ளது. 2

## எதிரணிப் பக்கம் அமர்ந்தனர் மைத்திரி உட்பட 40 எம்.பிக்கள்

### சுயாதீனக் கூட்டணி அதிரடி



கோட்டாபய அரசிலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் உட்பட 11 கட்சிகளின் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இன்று எதிரணிப் பக்கம் அமர்ந்தனர். நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. 2

## 20 ஐ குப்பையில் வீசுங்கள்: 19 இற்கு உயிர் கொடுங்கள்

### - சபையில் ரணில் கோரிக்கை



அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் குப்பைக் கூடையில் போடுங்கள். 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீளச் செயற்படுத்துங்கள்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 2

# நெருக்கடிக்கு உடன் தீர்வு 19ஐ மீள அமுலாக்குவதே!

### நாடாளுமன்றில் ஒப்புக்கொண்டார் மஹிந்த



அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை சில திருத்தங்களுடன் மீள அமுலாக்குவதே தற்போதைய நெருக்கடிக்கு குறுகிய கால தீர்வாக அமையும் என்று நான் நம்புகின்றேன்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் இன்று தெரிவித்தார். 2

## பாணின் விலையும் 30 ரூபாவால் உயர்வு



கோதுமை மாவின் விலை அதிகரிப்பையடுத்து ஒரு இறாத்தல் பாணின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனப் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 2

## பஸ் கட்டணமும் மீள அதிகரிப்பு

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், மறுபுறத்தில் விலை உயர்வும், கட்டண அதிகரிப்பும் ஓய்ந்தபாடில்லை. இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணம் 35 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஆரம்ப பஸ் கட்டணமாக 27 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் ஆரம்ப கட்டணமாக 2

## கோட்டாபய நியமித்துள்ள அமைச்சரவை பயனற்றது

### தயாசிறி எம்.பி. சாடல்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிதாக நியமித்துள்ள அமைச்சரவை பயனற்றது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் 2

### நஸீருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க

## 22 இல் கூடுகின்றது மு.காவின் உயர்பீடம்



முழுநாடும் ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்குப் போராடிக்கொண்டிருக்கின்ற நிலையில், கட்சியின் கட்டுப்பாட்டை 2

## இலங்கை மீண்டெழுவதற்கு இந்தியா முழு அளவில் ஒத்துழைத்து உதவும்

### சர்வதேச நாணய நிதியக் கூட்டத்திடையே உறுதி தெரிவிப்பு



அமெரிக்காவின் வொஷிங்டன் டி.ஸியில் சர்வதேச நாணய நிதியம் – உலக வங்கி ஆகியவற்றின் இளவேனில் காலக் கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காகச் சென்றிருக்கும் இலங்கையின் நிதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழுவினர் அங்கு இந்திய நிதி அமைச்சர் 2

## மக்களை ஏமாற்றும் கண்துடைப்பு நாடகம்

### புதிய அமைச்சரவைக்கு எதிராகப் பேராயர் போர்க்கொடி



ஜனாதிபதி நியமித்துள்ள புதிய அமைச்சரவை மக்களை ஏமாற்றுவதற்கான கண்துடைப்பு நாடகமாகும் என்று பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். எனவே, 2

## அரசுக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்க இரண்டு நிபந்தனைகள்

### 11 சுயாதீனக் கட்சிகளின் கூட்டணி முன்வைப்பு



கோட்டாபய அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க இரண்டு நிபந்தனைகளை 11 சுயாதீனக் கட்சிகளின் கூட்டணி முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. ஊடகங்களிடம் கூறியதாவது:-

கோட்டாபய அரசுக்கு ஆதரவாக தற்போது 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2

## ரயிலில் மோதி சிப்பாய் சாவு

### சங்கத்தானையில் சம்பவம்

(ந.லோகதயாளன்)

சாவகச்சேரிப் பகுதியில் இன்று ரயிலுடன் மோதி இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இதன்போது சமன்குமார என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தார்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் மோதியே இந்த 2

## 300 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் அரசுக்கு எதிராக நாளை முதல் போராட்டம்

கோட்டாபய அரசுக்கு எதிராக நாடு முழுவதும் நாளை முதல் ஒரு வார காலத்துக்குத் தொடர் போராட்டங்களை மேற்கொள்ள 300 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களை உள்ளடங்கிய தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இதன்படி நாளை 20ஆம் திகதி முதல் எதிர்வரும் 28ஆம் திகதிவரை நாடுமுழுவதுமுள்ள பிரதான நகரங்களில் ஒன்றுகூடி மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாகத் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பேச்சாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

அரசு, அரசின் பங்குள்ள நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை உட்பட 300 2

## கோட்டாபய நியமித்துள்ள.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சருமான தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.

ஆகவே நாடாளுமன்றத்தில் யாருக்குப் பெரும்பான்மை இருக்கின்றது என்பதைப் பற்றிச் சிந்திக்காது நாடு எதிர்கொண்டிருக்கும் பிரச்சினையில் இருந்து எவ்வாறு மீள்வது என்பது பற்றி அனைத்துக்கட்சிகளும்ஒன்றிணைந்து கலந்து பேசி தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

நேற்றிரவு சிங்களத் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு தற்போது மிக மோசமான காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளது ஆகவே, அரசிடம் மக்களது கேள்விகளுக்குப் பதில் இல்லை என்றே கூற வேண்டும். அதுமாத்திரமன்றி சமகால பிரச்சினைகளோடு நாட்டைக் கொண்டு செல்வதும் கடினமாகும்.

தற்போது எதிர்க்கட்சியினர் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முயற்சித்து வருகின்றனர். இருப்பினும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கான தருணம் இதுவல்ல.

நாடு நிலையான பயணத்தை மேற்கொள்ள வேண்டுமானால் நிறைவேற்று அதிகாரம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் நிறைவேற்று அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்குப் பாரப்படுத்தப்படும் வகையில் அரசமைப்பு ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்துக் கட்சிகளும் ஒரே மேசையில் அமர்ந்து நாட்டின் சமகால நிலைமைகளை கலந்துரையாடி ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகளைக் காண்பதற்கு முற்படவேண்டும்.

நாடாளுமன்றத்தில் இருக்கின்ற 225 உறுப்பினர்களையும் பதவி விலகுமாறு இளைஞர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று எழும் பட்சத்தில் நாடு நெருக்கடியையே எதிர்கொள்ளும்.

ஆகவே, இப்பிரச்சினையை அணுகும் வகையில் அனைத்துத் தரப்பினரும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஏற்றுக்கொள்ளும் வகையிலான சட்ட திருத்தங்களை அமுல்படுத்துவதன் மூலம் நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாடாளுமன்றம் அதிகாரங்களைத் தனதாக்கிக் கொள்ளும் பட்சத்தில் அனைத்து நடவடிக்கைகளும் இயல்பாக முடியும். அத்தோடு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் - என்றார்.

## நெருக்கடிக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் நாடாளுமன்றம் இன்று முதன்முறையாகக் கூடியது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, 'அரசமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்ய அவசியமான ஒத்துழைப்பை எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்துக்கு வழங்குவதற்கு நான் தயாராக உள்ளேன்' என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று ஆற்றிய விசேட உரையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 20ஐ குப்பையில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நாடுஇக்கட்டானநிலையில்உள்ளது. நெருக்கடி மேலும் உக்கிரமடையும். எனவே, இந்நிலைமையைச் சமாளிப்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

இவ்வாறான நிலைமை ஏற்படும், இவற்றைச் செய்யுங்கள் என முன்கூட்டியே அரசுக்கு ஆலோசனை வழங்கினோம். ஆனால், அரசு எதனையும் செய்யவில்லை.

19 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்த பிரதமர் என்ற வகையில், அதனை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வருவது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். முடிந்த விரைவில் 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் குப்பைக் கூடைக்குள் போடுங்கள்.

19ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் கொண்டுவர நாம் நடவடிக்கை எடுப்போம். அதனைச் செய்ய வேண்டியது அவசியம். 19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழேயே ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை கிடைத்தது. 20ஆவது திருத்தச் சட்டத்தின்படி செயற்பட அவருக்கு மக்கள் ஆணையில்லை. உரிமையும் இல்லை - என்றார்.

## எதிரணிப் பக்கம்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போதே மேற்படி உறுப்பினர்கள் எதிரணிப் பக்கம் அமர்ந்தனர்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவோம் என 11 கட்சிகளும் அறிவித்துள்ளன.

இதேவேளை, அரசில் இருந்து விலகி சுயாதீனமாகச் செயற்பட்டு வரும் தமது கட்சியின் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனியாக எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ளனர் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றில் இன்று தெரிவித்தார்.

## கோதுமை மாவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது எனப் பிறீமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

## பாணின் விலை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறித்த சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

## பஸ் கட்டணமும்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

23 ரூபாவே பெறப்பட்டுவந்தது.

தனியார் மற்றும் இ.போ.ச. எனப் பஸ்களுக்கு இந்தக் கட்டண உயர்வு பொருந்தும் என்று போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம அறிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையிலேயே பஸ் கட்டணமும் எகிறியுள்ளது.

அத்துடன், ஓட்டோ கட்டணம் மற்றும் பாடசாலை போக்குவரத்துக் கட்டணம் என்பனவும் அதிகரிக்கப்படவுள்ளது

## மக்களை ஏமாற்றும்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அமைச்சரவையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில்

ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

இந்த அரசு பதவி விலக வேண்டும், சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைக்கால அரசு அமைய வேண்டும் என்பதே மகாநாயக்க தேரர்களின் நிலைப்பாடாக இருந்தது. அதற்குக்கூட ஜனாதிபதி செவிமடுக்கவில்லை.

மக்கள் கோரிக்கையை ஏற்காமல், புதிய அமைச்சரவையை நியமித்துள்ளார். இது தீர்வு அல்ல. மக்களை ஏமாற்றுவதற்கான கண்துடைப்பு வேலை.

அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை எம்மாலும் ஏற்க முடியாது.

போராட்டக்காரர்களை விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறான ஜனநாயக விரோதச் செயலில் அரசு ஈடுபடக்கூடாது - என்றார்.

## 22இல் கூடுகிறது..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டுமொரு தடவை மீறிக்கொண்டு அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்ட நஸீர் அஹமட் தன்னை ஓர் அவமானச் சின்னமாக மாற்றிக்கொண்டுள்ளார்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏற்கனவே கட்சியின் கட்டுப்பாட்டை மீறியமைக்காக நஸீர் அஹமட் உட்பட 4 உறுப்பினர்களையும் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கி, ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில், அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்டமையானது மிகவும் அசிங்கமானது.

கட்சியின் உயர்பீடம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஒன்றுகூடி, நஸீர் அஹமட்டுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் - என்றார்.

## இலங்கை மீண்டெழு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்மலா சீதாராமன் குழுவினரைக் கூட்டத்தொடருக்கு வெளியே சந்தித்துப் பேசினர். இந்தியாவின் மிக நெருங்கிய, உண்மையான நட்பு அயல் தேசமான இலங்கைக்கு அதன் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு தன்னால் இயன்ற முழு ஒத்துழைப்பையும் பாரதம் வழங்கத் தயாராக இருப்பதாக நிர்மலா சீதாராமன் இந்தச் சந்திப்பின்போது உறுதி கூறினார்.

## ரயிலில் மோதி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து இடம்பெற்றுள்ளது. சங்கத்தானை ரயில் நிலையத்தில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் உணவு எடுக்கச் சென்ற சமயமே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்த இராணுவச் சிப்பாயின் சடலம் தற்போது சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 300 இற்கும் மேற்பட்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இற்கும்மேற்பட்டதொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் எனவும், 28ஆம் திகதி முதல் தொடர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசு மக்கள் கருத்துக்குக் கௌரவம் அளித்து முடிவெடுக்கும் வரை தொழிற்சங்கப் போராட்டம் தொடரும் எனவும் ரவிகுமுதேஷ்மேலும்தெரிவித்துள்ளார்.

## அரசுக்கு எதிரான.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளனர். எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்தால் அது தோல்வி அடையும். அதன்மூலம் அரசு பலமடையும்.

எனவே, 113 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதை ஐக்கிய மக்கள் சக்தி உறுதிப்படுத்த வேண்டும். அடுத்ததாக சர்வகட்சி இடைக்கால அரசமைக்க ஆதரவு வழங்க வேண்டும். இவ்விரு நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டால், பிரேரணையை ஆதரிக்க நாம் தயார் - என்றார்.

## பிள்ளையானும் அமைச்சரானார்



மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) இன்று இராஜாங்க அமைச்சராகப் பதவி யேற்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பரிதாபத்துக்குரிய பாத்திரம்

தென்னிலங்கையில் இப்போது மிகவும் பரிதாபத்துக்குரிய அரசியல்வாதி யார் என்று கேட்டால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தான் என்று அரசியல் அரிச்சுவடி படித்த சின்னப் பிள்ளை கூடக் கூறிவிடும். கடைசியாக அத்தகைய நிலைக்கு வந்து நிற்கின்றார் அவர். அதுவும் தனது தள்ளாத வயதில்.

ஜனாதிபதி பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் மனித உரிமைகளுக்காக ஜெனிவா வரை சென்று குரல் கொடுத்த சம்பியனாகப் பார்க்கப்பட்டவர் மஹிந்தர். கடைசியில் மனித உரிமை மீறல்கள், மனித மாண்புக்கு எதிரான கொடூரங்கள், யுத்தக் குற்றங்கள் போன்றவற்றின் பிரதான சூத்திரதாரி என்று சமூகத்தினால் மோசமாக நோக்கப்படும் நிலையை எட்டி இருக்கின்றார்.

தென்னிலங்கை அரசியலில் நவீன துட்டகைமுனு என்று போற்றப்பட்ட அவர் அதே தென்னிலங்கை மக்களால் குடும்ப அடாவடி ஆட்சி, ஊழல், மோசடிகளில் பிதாமகர் என்று துரத்தப்படும் நிலைக்கு இன்று சென்றிருக்கின்றார்.

ஒரு தடவை பெரும் அரசியல் வீழ்ச்சியிலிருந்து தமக்கு மக்கள் அளித்த மீளெழுச்சியைப் புரிந்து கொண்டு, தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் திருத்தி, திருந்தி நடக்க வழி காட்ட இயலாமல் போனமையால் இன்றைய துன்பியல் நிலைமை அவருக்கு.

ஜனாதிபதி ஆட்சி முறைமை தொடர்பான அவரது நிலைப்பாடு, நடவடிக்கை என்பன யதார்த்த அரசியலுக்காகக் கொள்கை இல்லாமல் குத்துக்கரணம் அடிக்கும் அவரின் போக்கை துலாம்பரமாக அம்பலப்படுத்தி நிற்கின்றது.

2005 ஜனாதிபதித் தேர்தலின்போது தாம் அதிகாரத்துக்கு வந்தால், அந்த தடவையோடு நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை முடிவுக்கு கொண்டு வருவார் என்று ஜே.வி.பி. உட்பட பல தரப்புகளுக்கும் எழுத்து மூலம் உறுதி அளித்து, அந்த உறுதிப்பாட்டின் மூலம் கிடைத்த ஆதரவில்தான் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

அதிகாரத்துக்கு வந்த பின்னர் என்ன செய்தார்? ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் அரசமைப்பின் 17ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் வெட்டி குறைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் அதிகாரங்களை 18 ஆவது திருத்தம் மூலம் முன்னெப்போதும் இல்லாத வகையில் வலுப்படுத்தி, தன்னை ஓர் எதேச்சதிகாரி நிலையில் நிறுத்தினார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நான் பதவிக்கு வந்ததும் அந்த ஒரு தடவையுடன் இல்லாது ஒழிப்பேன் என்று உறுதி கூறிப் பதவிக்கு வந்தவர், அடுத்தடுத்து இரண்டு முறைகள் அந்தப் பதவியை வகித்தமை மட்டுமல்லாமல், இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் அப்பதவியில் இருக்க முடியாது என்ற அரசமைப்பு ஏற்பாட்டை 18 ஆவது திருத்தம் மூலம் மாற்றி, மூன்றாம் முறையும் கூட அதை அனுபவிக்க முயன்றார்.

நல்லவேளை, நாட்டு மக்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி இணைந்து அவரை வீட்டுக்குத் துரத்தினர். நல்லாட்சி அரசின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் வரம்பு மீறிய அதிகாரங்களை 19ஆவது திருத்தம் மூலம் வெட்டிக் குறைத்தனர்.

எனினும் மக்களின் மன்னிப்பு, மீள வாய்ப்பு அளிக்கும் தாராளம், பச்சாதாபம் ஆகியவற்றை பயன்படுத்தி தனது தலைமையிலான கூட்டணியை திரும்பவும் ஆட்சிக்கு –அதிகாரத்துக்கு – கொண்டு வந்தார் மஹிந்தர். தமது தம்பியாரை ஜனாதிபதியாக்கி, தாம் பிரதமராகி, ஆட்சியைப் பிடித்தவர் மீண்டும் வேதாளம் முருங்கையில் ஏறிய கதையாக 19 ஆவது திருத்தத்தை மாற்றி, ஜனாதிபதியான தம்பியாருக்குக் கட்டுமட்டில்லா அதிகாரத்தை வழங்கும் 20ஆவது திருத்தத்துக்குத் துணை போனார். இதில் வேடிக்கை என்னவென்றால், நாடாளுமன்றில் பிரதமர் என்ற முறையில் தமக்கிருந்த அதிகாரங்களை ஜனாதிபதியாகிய தம்பியாரிடம் பறிகொடுக்கும் இழுக்குக்குத் துணை போன அவர், இன்று மக்கள் எழுச்சியால் சந்தி சிரிக்கும் நிலைக்கு – நிலைமைக்கு – வந்துள்ளார்.

இப்போது மீண்டும் 20ஐத் திருத்தி, 19 ஐக்கொண்டுவந்து வருவதற்கான 21 ஆவது திருத்தம் பற்றி பேசும் நிலைமை அவருக்கு.

இப்படி எத்தனை தரம்தான் குத்துக்கரணம் அடிப்பார் அவர்? பாவம். பெரும் பரிவுக்கு – பரிதாபத்துக்கு – உரிய அரசியல் பாத்திரம் அவருடையது.

# அரசாங்கத்தை விஞ்சிய அதிகாரம் அரசமைப்பிற்கு!

## உண்டு என்கிறார் சஜித்



நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தை விடவும் அரசமைப்பு சக்திவாய்ந்தது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஜனநாயக அடிப்படைகளைப் பின்பற்றி, அமைதியான முறையில் போராடும் மக்களுக்கு எதிராக அச்சுறுத்தல்களையும்அடக்குமுறைகளையும்மேலாதிக்கத்தையும் பிரயோகிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமேயானால், அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான கேடயமாக ஐக்கிய மக்கள் சக்தி மாறும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்துள்ளார்.

நாட்டின்நிலைதொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு–

அரசமைப்பின் ஊடாக இந் நாட்டுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் புறக்கணிப்பதற்கோ அல்லது அவற்றை மீறுவதற்கோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரசாங்கத்துக்கும் அதிகாரம் இல்லை என்பதை அவர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

மாளிகையில் சகல வசதிகளுடனும் வாழும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்களின் போராட்டக்குரல் கேட்கவில்லை.

ஆனால் எமது கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, போராட்டத்தில் மக்கள் முன்வைக்கும் அனைத்துக் கோரிக்கைகளையும் நன்கு புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு செயலாற்றிவருகின்றது.

அதனாலேயே அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையும், ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணையையும் கொண்டு வருவதுடன் நிறுத்திக்கொள்ளாமல் அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்தை நீக்கி, மீண்டும் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்குத் திட்டமிட்டிருக்கின்றோம்.

நாடளாவியரீதியில் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றார்கள்.

ஆனால் அரசாங்கம் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கும், இறக்குமதி செய்வதற்கும் தயாராகி வருகின்றது. அது மாத்திரமன்றி அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணத்திலும் பாரிய மோசடி இடம்பெற்று வருகின்றது. இவற்றை உடனடியாக முடிவிற்குக் கொண்டு வரவேண்டும். – என்றார்.

# நாட்டின் இன்றைய நிலைமைக்கு முன்னாள் அமைச்சர்களே பொறுப்பு

## சாடுகிறார் விமல்



வீதியில் இறங்கிப் போராடும் பொதுமக்கள் நகரங்களை மூடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலைக்கு நாமல் ராஜபக்ஷ உட்பட்ட முன்னாள் அமைச்சர்கள் பொறுப்புக் கூறவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், அன்று தாம் இன்றைய நிலை ஏற்படும் என்று கூறியபோதும் அசிங்கமான கப்புட்டாவை அழைத்து வந்ததன் பிரதிபலனே இன்று நாட்டு மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே பிரதமர் உட்பட்ட முழு அமைச்சரவையும் பதவி விலகி இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றில் இன்று புதிய அமைச்சர்கள் முதலாவது ஆசன வரிசையிலும், முன்னாள் அமைச்சர்கள் இரண்டாவது வரிசையிலும் அதற்கு பின்னால் இராஜாங்க அமைச்சர்களும் அமர்ந்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தாம் ஆடைகளை அணிந்துகொள்ளும் வரை குழந்தையை பார்த்துக்கொள்ளுமாறு கூறுவதை போன்று இன்று முன்னாள் அமைச்சர்கள், புதியவர்களுக்கு இடமளித்து பின்னால் இருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றனர் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

# இரசாயன உரம் வழங்காதமை தவறு ஒப்புக்கொண்டார் ஜனாதிபதி கோட்டா

## மீண்டும் இரசாயன உரம்



சர்வதேச நாணயநிதியத்தை முன்னதாகவே இலங்கை நாடியிருக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இயற்கைஉரபாவனையை கொண்டுவரும் முயற்சியில், விவசாயிகளுக்கு இரசாயன உரங்களை வழங்காமை பிழையானது என்றும் அவர் ஒப்புக்கொண்டார்.

ஆகவே விவசாயிகளுக்கு இரசாயன உரத்தை அரசாங்கம் மீண்டும் வழங்கும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டார்.

சட்டமியற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ள நிலையில் மாற்றங்களை முன்வைக்க தேவையான ஆதரவை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

சேதனப்பசளைபயன்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என கடந்தகாலங்களில்ஜனாதிபதிவிடாப்பிடியாக இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# பொறுமையை சோதிக்காதீர்கள்; பாகிஸ்தானுக்கு தலிபான் அரசு எச்சரிக்கை



எங்களது பொறுமையை சோதிக்காதீர்கள் என்றுவான்வழித்தாக்குதல்குறித்துபாகிஸ்தானுக்கு ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசு மிரட்டல் விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் கோஸ்ட் மாகாணத்தில் ஸ்பேரா மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 40 பேர் பலியாகினர். 22 பேர் காயம டைந்தனர். இதுகுறித்து ஆப்கானிஸ்தான் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் சபிமுல்லா முஜாகித்தீன் கூறும்போது, நாங்கள் முடிந்தவரை இரு நாடுகளுக்கு இடையேயான பிரச்சினையை பேச்சு மூலம் தீர்க்க முயற்சி செய்கிறோம். ஆனால், பாகிஸ் தானின் இம்மாதிரியான நடவடிக்கைகள் பதற்றத்தை உண்டாக்கிமோதலுக்குவழிவகுக்கும். அதனால் யாருக்கும் பயனில்லை என்று தெரிவித் தார். மேலும் எதிர்காலத்தில் இம் மாதிரியான செயல்களை தவிர்க்குமாறு பாகிஸ்தானை ஆப்கா னிஸ் தான் கேட்டுக்கொண்டுள்ளது. ஆனால், இத்தாக்குதல் குறித்து பாகிஸ்தான் இதுவரை எந்த பதிலும் அளிக்கவில்லை.

முன்னதாக, கடந்த 20 ஆண்டுகளாக அமெ ரிக்க, நேட்டோ படைகளுக்கு எதிராகப் போராடிய தலிபான்கள் வசம் தற்போது ஆப்கானிஸ்தான் வந்துவிட்டது. அமெரிக்கா, நேட்டோ படைகள் வெளி யேறத் தொடங்கியவுடன் ஆப்கானிஸ்தானை தங் கள் பிடிக்குள் தலிபான்கள் கொண்டுவந்துள்ளனர். தலிபான்கள் தலைமையிலான ஆப்கானிதானில் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன எனவும், கடுமையான பஞ்சம் பல இடங்களில் நிலவுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# அணுசக்தி ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு அமெரிக்கா தாமதிப்பதாக ஈரான் குற்றச்சாட்டு



அணுசக்தி ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க அமெரிக்கா தாமதம் செய்து வருவதாக ஈரான் குற்றம்சாட்டியுள்ளது.

இதுகுறித்து ஈரான் வெளியுறவு அமைச் சக செய்தித் தொடர்பாளர் சயீத் கதிப்சாதே கூறும்போது, ஈரானுக்கும் அமெரிக்கா-விற்கும் இடையே இன்னும் ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்சினைகள் நிலுவையில் உள்ளன. அமெரிக்கா அணுசக்தி ஒப்பந் தத்தை புதுப்பிப்பதில் தாமதம் செய்து வருகிறது. கடந்த வாரம் ஹென்றி மோரா (ஐரோப்பிய ஒன்றிய ஒருங்கிணைப் பாளர்) மூலம் அமெரிக்க வழங்கிய செய்தி, ஒப்பந்தம் புதுப்பிக்கப்ப டுவதற்கான காலத்தைநீடிக்கக்கூடியதாக இருக்கிறது என்றார்.

ஈரான் கடந்த ஆண்டு முதலே பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ரஷ்யாவுடன் நேரடியாகவும், அமெரிக்கா வுடன் மறைமுகமாகவும் அணுசக்தி ஒப் பந்தத்தைப் புதுப்பிக்கும் முயற்சிகளில் ஈரான் ஈடுபட்டு வருகிறது

# சுவீடனில் குர்ஆனை எரித்ததால் கலவரம் 40இற்கும் மேற்பட்டோர் கைதாகினர்



சுவீடனில் குர்ஆன் பிரதி களை எரிக்கும் தீவிர வலதுசாரி குழுவின் திட்டங்களால் கோபம டைந்த மக்களுக்கும் பொலிஸா ருக்கும் இடையே ஏற்பட்ட வன் முறை தொடர்பாக 40க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை அன்று, கலவரக் காரர்களை எச்சரிக்கும் விதமாக நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் காயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, தீவிர வலதுசாரி டென்மார்க் அரசியல்வாதியான ராஸ்மஸ் பலுடான், தான் குர்ஆனின் ஒரு பிரதியை கொளுத்தி னார் எனவும், வருங்காலத்திலும் அவ்வாறே செய்வேன் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை தெற்கு நகரமான லிங்கோபிங் நகரத்தில் பொலிஸார் முன்னிலையில் ராஸ்மஸ் பலு டான் குர்ஆனை எரிக்க முயன்றார். இதையடுத்து, ராஸ்மஸ் பலுடான் ஆதர வாளர்களுக்கும், மக்களுக்கும் இடையே வன்முறை ஏற்பட்டது.

குர்ஆன் எரிப்பு சம்பவத்திற்கு சவுதி அரேபியா, ஈரான் ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

முன்னதாக, ஈராக், ஈரான் ஆகிய நாடுகள் அவற்றின் எதிர்ப்பை பதிவு செய்யும் விதமாக தங்கள் நாட்டில் உள்ள சுவீடன் தூதர்களுக்கு அழைப்பாணை அனுப்பி விளக்கம் கேட்டன.



# உக்ரைனின் கிழக்குப் பகுதிகள் மீது தாக்குதல்களை தொடங்கியது ரஷ்யா!

உக்ரைனின் கிழக்கு பகுதிகளை கைப்பற்றும் நோக்கில் அந்தப் பகுதி கள் மீது ரஷ்யா உக்கிர தாக்குதல் களை ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து டான்பாஸ் போர் தொடங்கிவிட்டதாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் தலைநகர் கிவ் உள்ளிட்ட பகுதிகளில் தாக்குதல் களை நிறுத்தி அப்பகுதிகளில் இருந்து வெளியேறிய ரஷ்யப் படைகள், உக்ரைன் கிழக்கு பகுதி களை நோக்கி கவனம் செலுத்தவுள் ளனர் என அறிவித்தருந்த நிலை யில் கிழக்கில் முழுமையான போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை முதலே உக்ரைன் கிழக்கு டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க் மற் றும் கார்கிவ் பகுதிகளின் உக்கிர தாக்குதல்களை நடத்தியவாறு ரஷ் யப் படைகள் முன்னேற முயன்று வருகின்றன.

ஆக்கிரமிப்பு ரஷ்யப் படைகள் எங்கள் முன்னரங்க பாதுகாப்பு நிலைகளை தகர்க்கும் நோக்குடன் தாக்குதல்களை தொடங்கியுள்ளன என உக்ரைன் பாதுகாப்பு பேரவை செயலாளர் ஒலெக்ஸி டானிலோவ் தெரிவித்தார்.

இதற்கிடையே மேற்கு நகர மான லிவிவ் மீது நேற்று காலை ரஷ்ய படைகள் ஏவுகணைகளை வீசி தாக்கின. அந்த நகரில் உள்ள 3 இராணுவ நிலைகள் மற்றும் கார் ரயர் பழுதுநீக்கும் தொழிற்சாலை மீது அடுத்தடுத்து பல ஏவுகணைகள் வீசப்பட்டன. இதில் 6 பேர் கொல் லப்பட்டனர் எனவும், ஒரு குழந்தை உள்பட 11 பேர் படுகாயமடைந்தனர் எனவும் லிவிவ் நகர மேயர் அன்ட்ரி சடோவி தெரிவித்தார்.

அத்துடன், உக்ரைன் கிழக்கு பகுதிகளில் ரஷ்ய படைகளின் பெரிய தரைவழி தாக்குதலை எதிர்க்கும் உக்ரைன் இராணுவத்தின் திறனை குறைக்கும் நோக்கில் நாடு முழு வதும் உள்ள ஆயுத தொழிற்சாலை கள், ரயில்வே மற்றும் பிற உள் கட்ட மைப்புகளை இலக்காக வைத்து ரஷ்ய படைகள் தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றன என இரா ணுவ வல்லுனர்கள் கூறுகின்றனர்.

தலைநகர் கிவ் மீதும் ரஷ்ய படைகள் தொடர்ந்து வான்வழித் தாக்குதல்களை நடத்திவருகின்றன.

கிவ் அருகே உள்ள ஆயுத தொழிற்சாலை ஒன்றை இரவோடு, இரவாக நவீன ஏவுகணைகள் மூலம் தாக்கி அழித்ததாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

அதேபோல் கிழக்கு நகரமான கிராமடோர்ஸ்க் மீதும் நேற்று காலை ஏவுகணைகள் மற்றும் பீரங்கி குண்டுகள் வீசப்பட்டன என உள்ளூர்அதிகாரிகள்தெரிவித்தனர்.

உக்ரைனின் 2ஆவது மிகப் பெரிய நகரமான கார்கீவில் ரஷ்ய படைகள் நடத்திய வான்வழி தாக்கு தலில் 5 பேர் கொல்லப்பட்டனர் என தகவல் வெளியாகி உள்ளது. ரஷ்ய ஏவுகணைகள் அடுக்குமாடி குடியி ருப்புகளை சரமாரியாக தாக்கின. இதில் அங்குள்ள வீதிகளில் உடைந்த கண்ணாடி மற்றும் பிற குப்பைகள் சிதறிக்கிடந்தன.

இதேவேளை, போர் தொடங்கிய தில் இருந்து இதுவரை உக்ரைன் இராணுவத்துக்கு சொந்தமான 136 போர் விமானங்கள், 471 ஆளில்லா விமானங்கள், 249 விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்புகள், 2,308 பீரங்கிகள் மற்றும் பிற கவச போர் வாகனங்கள், 254 ரொக்கெட் அமைப்புகள், 998 பீரங்கி துப்பாக் கிகள் அழிக்கப்பட்டுள்ளன என ரஷ்யஇராணுவம்தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தெற்கு உக்ரை னில்ரஷ்யபடைகள்சித்திரவதைகள் மற்றும் கடத்தல்களை நடத்திவரு கின்றனர் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார். அவர்கள் உள்ளூர் அரசாங்க பிரதி நிதிகளை கடத்துகின்றனர் எனவும், அப்பாவி மக்களை சித்திரவதை செய்வதோடு, மனிதாபிமான உத விப் பொருள்கள் திருடப்படுகின்றன என ஜெலன்ஸ்கி கூறினார்.

இது ரஷ்யாவின் திட்டமிட்ட பயங்கரவாத செயல் என சாடிய ஜெலன்ஸ்கி, ரஷ்யா மீது மேலும் கடுமையான பொருளாதார தடை களை விதிக்க வேண்டும் எனவும், தங்களுக்கு இன்னும் அதிகமான ஆயுதங்களை வழங்க வேண்டும் எனவும் உலக நாடுகளை வலியுறுத் தினார்.

# உக்ரைனின் லூவிவ் நகரில் ஏவுகணைத் தாக்குதல்; 7 பேர் சாவு



உக்ரேனின் லூவிவ் நகரில் நேற்று காலை ரஷ்யப்படைகள் நடத்திய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது என, லூவிவ் பிராந் திய தலைவர் மக்ஸிம் கோஸிட்ஸ்கி தெரிவித் துள்ளார்.

நான்கு ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாகவும், அதில் மூன்று ஏவுகணைகள் கிடங்கு ஒன்றை தாக்கின என வும், ஒரு ஏவுகணை வாகன பழுதுபார்க்கும் இடத்தைத் தாக்கியதாகவும் அவர் தெரிவித் தார்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# தமிழக அரசுப் பாடசாலைகளில் மேலாண்மை குழுக்கள் முதலமைச்சர் ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார்



சென்னை திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் பள்ளியில் நடைபெற்ற விழாவில், அரசுப் பாடசாலைகளில் மேலாண்மைக் குழுக்களை மறுகட்டமைப்பு செய்யும் திட்டத்தையும் நம் பள்ளி நம் பெருமை என்ற பெயரில் விழிப்புணர்வு பரப்புரை வாகனத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

அந்த விழாவில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பள்ளிப் பருவம் என்பது திரும்பக் கிடைக்காத ஒரு மகிழ்ச்சியான காலம். அத்தகைய பள்ளிப்பருவத்தில் இருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை, என்னுடைய பாராட்டுக்களை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு தலைமுறையில் பெறக்கூடிய கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும். உங்களிடம் இருந்து யாராலும் அதை பறிக்க முடியாது, திருட முடியாத ஒரு சொத்து இருக்கு என்றால், அது உங்களது கல்வி மட்டும்தான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அதனால்தான் பள்ளிக் கல்விக்கு இந்த அரசு மிகமிக முக்கியத்துவத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது, எத்தனை மிகமிக வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள். அந்த அளவிற்கு, கல்விக்காக இந்த அரசு மிக முக்கியத்துவத்தை தொடர்ந்து கொடுத்து வருகிறது.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகிய மூவரது சிந்தனையும் ஒரே நேர்கோட்டில் இருந்தால்தான், கல்வி நீரோடை மிக சீராகச் செல்லும். அதில் எவர் ஒருவர் தடங்கல் போட்டாலும் கல்வியானது தடம் புரண்டுவிடும்.

உலகப் புகழ்பெற்ற கவிஞர் கலீல் ஜிப்ரான் எழுதியிருக்கக்கூடிய வரிகளைத்தான் இங்கு இருக்கக்கூடிய பெற்றோர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல, அவர்கள் உங்கள் வழியாக வருகிறார்கள். ஆனால் அவர்கள் உங்களில் இருந்து வரவில்லை. அவர்களுக்கு நீங்கள் உங்கள் அன்பைத் தரலாம், சிந்தனையை அல்ல. அவர்களுக்கு என அழகான சிந்தனைகள் உண்டு. நீங்கள் அவர்களைப் போல ஆவதற்கு உழையுங்கள், ஆனால் அவர்களை உங்களைப் போல ஆக்கிவிடாதீர்கள், என்பதுதான் கலீல் ஜிப்ரான் எழுதிய கவிதை வரிகள். மிகப்பெரிய நீண்ட கவிதை அது. அதிலிருந்து சில வரிகளைத்தான் இப்போது உங்களிடத்தில் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

குழந்தைகளின் கல்வி என்பது ஒரு சமூகத்தின் எதிர்காலத்திற்கான அடித்தளம். அவர்களுக்கு அளிக்கப்படும் தரமான கல்விதான் சமுதாய முன்னேற்றத்தின் திறவுகோல். அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் மகிழ்ச்சியோடும் பாதுகாப்போடும் கல்வி கற்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதுதான் நமது அரசினுடைய நோக்கம், குறிக்கோள், லட்சியம்.

பள்ளிகளில் தரமான கல்வியை வழங்குவதிலும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் இந்திய துணைக்கண்டத்திற்கே தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழக அரசு பள்ளிக்கல்வித்துறைக்கு இந்த நிதியாண்டில் 36 ஆயிரத்து 895 கோடி ரூபா ஒதுக்கீடு செய்திருக்கிறது.

அரசுப் பாடசாலைகளை முழுமையாக மேம்படுத்துவதற்காக பள்ளி மேலாண்மைக் குழுக்களை சீரமைப்பதற்கான நடவடிக்கைகளைப் பள்ளிக்கல்வித்துறை மேற்கொண்டு வருகிறது. படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள், தலைமையாசிரியர், ஆசிரியர், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் கல்வியாளர்கள் போன்றோர் இந்தப் பள்ளி மேலாண்மைக் குழுவில் இடம் பெறுவார்கள்.

ஒவ்வொரு அரசுப் பள்ளியையும் தன்னிறைவு பெற்ற பள்ளியாக மாற்ற வேண்டும். அந்தப் பள்ளியின் தேவைகள் என்ன என்று அறிந்து அதை வழங்க வேண்டும். குழந்தைகளுக்குத் தரமான, சமமான கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும், அதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டும். இதனைச் செயல்படுத்துவதற்காகத்தான் மேலாண்மைக் குழுவை நாம் இப்போது அமைத்திருக்கிறோம்.

குழந்தைகளின் கற்றல் அடைவை மேம்பாடு அடையச் செய்தல், பள்ளியின் சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக்குதல், இடைநிற்றலை தவிர்த்தல் மற்றும் இடைநின்ற குழந்தைகளை வயதுக்கேற்ற வகுப்பில் மீண்டும் பள்ளியில் சேர்த்தல், பள்ளியின் அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்குதல் போன்ற செயல்பாடுகளில் புதிய மேலாண்மைக் குழுக்கள் ஆக்கபூர்வமாக செயலாற்ற வேண்டும், என்று தெரிவித்திருக்கிறார்.



## கல்வி மற்றும் சுகாதாரத்தை மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவர வேண்டும் என்கிறார் கபில் சிபல்

கல்வி மற்றும் சுகாதாரத்தை பொதுப் பட்டியலிருந்து மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவர வேண்டும் என்று காங்கிரஸ் பிரமுகர் கபில் சிபல் கூறியுள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினரான என்.ஆர். இளங்கோவின் மகன் ராகேஷ் நினைவாக, நீதி மற்றும் சமத்துவத்துக்கான சட்ட அறக்கட்டளை தொடங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், மூத்த வழக்கறிஞருமான கபில் சிபல், முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், இந்து குழுமத் தலைவர் என்.ராம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கத்தில், என்.ராம், நாடாளுமன்ற உறுப்பினர் வில்சன் ஆகியோர் தனித்தனியே முன்வைத்த கேள்விகளுக்கு கபில் சிபல் விளக்கம் அளித்தார். ஆளுநரின் அதிகாரம் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், மாநில அரசின் சட்ட மசோதாவை ரத்து செய்யும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை எனத் தெரிவித்தார்.

## இளையராஜாவை அவமதிப்பதா? பா.ஜ.க. தேசிய தலைவர் கண்டனம்



அம்பேதக்ருடன் பிரதமர் மோடியை ஒப்பிட்ட விவகாரத்தில் பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி. நட்டா இளையராஜாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி.நட்டா வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகின் தலைசிறந்த இசையமைப்பாளர் இளையராஜாவை அவமதிப்பதா? இளையராஜாவின் கருத்து பிடிக்கவில்லை என்றால் விமர்சிப்பதா? இதுதான் ஜனநாயகமா? ஒரு குறிப்பிட்ட கட்சிக்கும், அதன் கூட்டணி கட்சிகளுக்கும் எதிரான கருத்தை தெரிவித்தால் எதிர்ப்பதா? என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஆதரவாக பேசவில்லை என்பதால் அவரை விமர்சிப்பது தவறான அணுகுமுறை. கேரளா, மேற்கு வங்காளம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் பா.ஜ.கவினர் குறிவைத்து தாக்கப்படுகின்றனர் எனவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## பணமோசடியும், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலும் கிரிப்டோவை சுற்றியுள்ள சவால்கள் என நிதியமைச்சர் உரை



பணமோசடி, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் ஆகியவை தான் கிரிப்டோகரன்சியை சுற்றி இருக்கும் மிகப்பெரிய சவால் என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள நிர்மலா சீதாராமன் சர்வதேச நாணய நிதியத்தில் உரையாற்றினார். அப்போது அவர், உலக அளவில் கிரிப்டோகரன்சியை பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி அளிக்க பயன்படுத்துவதே பெரும் சவாலாக இருக்கிறது. இதை தடுப்பதற்கு நாம் தொழில்நுட்ப பயன்பாட்டை ஒழுங்குபடுத்த வேண்டும்.

2019 ஆம் ஆண்டு தரவுகளின்படி இந்தியா டிஜிற்றல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை 85 சதவீத வேகத்தில் தழுவி வருகிறது.

உலக அளவில் 64 சதவீதம் டிஜிற்றல் கட்டமைப்பை கொண்ட நாடாக இந்தியா இருக்கிறது. நாம் டிஜிற்றல் தொழில்நுட்பத்தை பரிசோதிக்கவும், அவற்றை சாதாரண மக்கள் வரை பயன்படுத்தவும் பெரிதும் உதவி இருக்கிறது.

இந்தியா கிரிப்டோகரன்சி, பிளாக்செயின், பிண்டெக் ஆகியவற்றை நிறுத்தவிரும்பவில்லை. கேபினெட் மூலம் கிரிப்டோகரன்சிக்கு ஒழுங்குமுறையை அமைப்பதற்கான பணியில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக ரிசர்வ் வங்கி தனது சொந்த டிஜிற்றல் கரன்சியை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது, என்று தெரிவித்துள்ளார்.

# மொட்டுக்கு முட்டுக் கொடுத்து ஹாபீஸ் நஸீர் சமூகத்திற்குப் பெரும் அநீதி இழைத்துள்ளார்

## வெட்கம் என்கிறார் மு.கா. உயர்பீட உறுப்பினர் ஆரிப் சம்சுதீன்




ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் அஹமட் சுற்றாடல் அமைச்சர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். தோல்வியடைந்த அரசில் பதவிகளைப் பொறுப்பெடுத்தமையைத் துரோகத்தனமான, கண்டனத்துக்குரிய செயற்பாடாகப் பார்க்கிறோம். எமது நாட்டின் மக்களும், இளைஞர்களும் காலிமுகத்திடலில் நாட்டின் நலனுக்காக ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்று பல நாள்களாகப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் தோல்வியின் விளிம்பில் இருக்கும் மொட்டுக்கு முட்டுக்கொடுப்பதானது சமூகத்திற்கு செய்யும் பெரும் அநீதியாகும். - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் தெரிவித்தார்.

நேற்று கல்முனையில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :-

தேர்தல் காலங்களில் மொட்டைக் கடுமையாகச் சாடி மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும், மிக மோசமான 20க்கு ஆதரவளித்து ஜனாதிபதியை சர்வாதிகாரியாக மாற்றி, மிகப்பெரும் அநியாயத்தை செய்திருந்தனர். இவர்களினால் இலங்கை முஸ்லிம் சமூகம் தலைகுனிந்திருந்தது.

மக்களின் நலனையோ நாட்டின் எதிர்காலத்தையோ பற்றிச் சிந்திக்காமல் இன்று ஹாபீஸ் நஸீர் அமைச்சர் பதவியை ஏற்று, அதனை விடப் பெரிய தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளார். இந்த அரசே மக்கள் வேண்டாம் என்று குரலெழுப்பிக் கொண்டிருக்கும் நிலையில், இப்படியான செயலை செய்திருக்கும் ஹாபீஸ் நஸீருடன் கடந்தகாலங்களில் மாகாண சபையில் ஒன்றிணைந்து பணியாற்றியமையை எண்ணி வெட்கப்படுகிறேன். இவர்கள் தங்களை என்ன கூறி நியாயப்படுத்தினாலும் அதனை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாரில்லை. சமூகத்திற்கு இவர்கள் செய்த பாவத்தை எங்கு சென்று கழுவப்போகிறார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை.

கட்சி தலைவரினதும், கட்சி உயர்பீடத்தினதும் தீர்மானத்தை மீறி செயற்பட்டுள்ளார். இதை பாரிய நம்பிக்கை துரோகமாகவே பார்க்க வேண்டியுள்ளது. 20ஐ இல்லாதொழித்து, 19ஐ கொண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதியே கருத்துக்களை வெளியிட்டுவரும் இந்த காலத்தில் அந்த ஜனாதிபதியிடம் சென்று அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவியை பெற்றிருப்பது மக்கள் மத்தியில் விமர்சனத்தை பெற்றுள்ளது. இவரின் செயற்பாடு எல்லோருக்கும் கவலையளிக்கும் விடயமாக அமைந்துள்ளது.


ஊழலை ஒழிக்கும் கடமைப்பாடு எங்கள் எல்லோருக்கும் இருந்து கொண்டிருக்கிறது. இவர்களினால் நாட்டின் அரசியலில் தலைதூக்கியுள்ள ஊழலை ஒழிக்க முடியுமா? ஊழலின் காரணமாக தூய அரசியலை செய்யமுடியாத துர்ப்பாக்கிய நிலை இலங்கையில் தோன்றியுள்ளது. உள்ளூராட்சி மன்றம் முதல் நாடாளுமன்றம் வரை நாட்டின் இறைமையைச் சீரழிக்கும் கறையான் போன்ற இந்த ஊழல் இல்லாதொழிக்கப்பட வேண்டும். நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் மிதமிஞ்சிய ஊழல்களே. கடந்த அரசுகளில் கொஞ்சம் கொஞ்சமாக இருந்த ஊழல்கள் இந்த அரசில் மிதமிஞ்சி இருக்கிறது. நாடு இவ்வளவு சீரழியும் வரை அமைச்சர்கள் மனைவி மாருடன் சமையலறையில் அமர்ந்து சமைத்து கொண்டா இருந்தார்கள் என்று கேட்கவேண்டியுள்ளது.

கொரோனா காலத்தில் 5 டொலருக்கு வாங்கவேண்டிய தடுப்பூசிகளை 15 டொலர்களுக்கு வாங்கிய இந்த அரசு தகவல்களை அழித்து பாரிய மோசடிகளை செய்தது. அதற்கு உடந்தையாக இருந்து அந்தக் காரியங்களை முன்னெடுத்தமையுடன், டாக்டர் ஷாபி விடயத்திலும் இனவாதமாக மனிதாபிமானமின்றி செயற்பட்ட பேராசிரியர் சன்ன ஜயசுமன இந்த அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக இடம்பெற்றுள்ளார். அவர் கடந்த காலங்களில் பல ஊழல்களுக்கு துணையாக நின்றவர். அரசியலில் பண அரசியல் கலாச்சாரத்தை தோற்றுவித்த ஹாபீஸ் நஸீர் போன்ற நிறைய ஊழல்வாதிகள் இந்த அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களின் ஊழல்களுக்கு எதிராக காலிமுகத்திடலில் நடைபெறும் இளைஞர்களின் போராட்டம் தொடர்ந்தும் உத்வேகத்துடன் இடம்பெற வேண்டும். - என்று மேலும் தெரிவித்தார்.

# புதையல் தோண்டிய நால்வர் வவுணதீவில் நேற்றுக் கைது





மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய நால்வர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த அப்புஹாமி தெரிவித்தார்.

மண்முனை மேற்கு பிரதேசத்தின் இருட்டுச்சோலைமடு பகுதியில் அமைந்துள்ள விவசாய பண்ணை காணியொன்றில் சுமார் 20 அடி ஆழத்தில் மின்சார இயந்திரங்களைக் கொண்டு குழிவெட்டப்பட்டு புதையல் தோண்டிய நிலையில், நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினரின் இரகசிய தகவலுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இந்த புதையல் தோண்டும் நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விவசாய பண்ணைக் காணியொன்றில் சூட்சுமமான முறையில் இந்த புதையல் தோண்டும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் பம்கள் இரண்டு, துளை கருவி இயந்திரம், வெடிமருந்து, ஜெலட்டின் குச்சிகள், வெடிக்கான திரிகள், பாரம் தூக்கி மோட்டார், வயர்கள், மோட்டார் சைக்கிள் - 4, மண்வெட்டி, சவள், வயர் உள்ளிட்ட பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# கல்முனைப் பிரிவு வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு இதுவரை இல்லை

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடுகள் ஏற்படவில்லையென, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் நேற்றுத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துகளுக்கான தட்டுப்பாடு தவிர்க்க முடியாத அளவில் ஏற்பட்டுள்ள இச்சூழலில், கல்முனை பிராந்தியத்தை பொறுத்த மட்டில் மிகுந்த சிரத்தையோடு இம்மருந்துத் தட்டுப்பாட்டுப் பிரச்சினை பொதுமக்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் கையாளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் இதுவரை மருந்துத் தட்டுப்பாடு ஏற்படவில்லையெனவும், அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் அதற்கான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும், நோயாளிகளுக்கு கிரமமான முறையில் மருந்துகள் வழங்கப்படுமெனவும் அவர் கூறினார்.

எவ்வாறான இடர்கள் ஏற்பட்டாலும் வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கான சிகிச்சைகள் வழமை போன்று வழங்கப்படுமெனவும், இதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக நோயாளிகள் எவ்வித தயக்கமும் கொள்ள வேண்டாமெனவும் அவர் கேட்டுள்ளார்.

# எரிபொருள் பதுக்கலை தேடி பொலிஸ் வேட்டை

## அக்கரைப்பற்றுப் பகுதியில்

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் எரிபொருளை சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருப்பவர்களைக் கைது செய்வதற்கு திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.சதாத் நேற்றுத் தெரிவித்தார்.

இச் சோதனையின் போது கைப்பற்றப்படும் எரிபொருள் அரச உடமையாக்கப்படுவதுடன், உரிய நபருக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தொடர்ச்சியாக மக்களின் நீண்ட வரிசை காணப்படுகின்றது. இதற்கு காரணம் சிலர் எரிபொருளை தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்து பதுக்கி வைப்பதுதான் எனத்தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு எரிபொருளைப் பதுக்கி வைத்திருப்போர்கள் சம்பந்தமாக பொலிஸாருக்குத் தகவல் தருமாறு பொதுமக்களிடம் கேட்கப்பட்டுள்ளது.



# சுகாதாரப் பணியாளர்களுக்கு திருமலையில் உடற்பயிற்சி

(ஹஸ்பர்)

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு திருகோணமலை பிராந்திய சுகாதாரத் திணைக்களம் ஏற்பாடு செய்த உடற் பயிற்சி நிகழ்வு அண்மையில் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரீஸ் பயிற்சியாளராகக் கலந்து கொண்டு உடற்பயிற்சியை வழங்கினார்.

இதில் வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படல் வேண்டும்

## பேராயர் கர்தினால் கருத்து



இந்த நாடு ஆட்சியாளர்களுக்கு சொந்தமானது கிடையாது. இது மக்களுக்குச் சொந்தமான நாடாகும். ஆட்சியாளர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரம் இந்த நாட்டை நிர்வகிப்பவர்கள். இந்நாட்டின் முழு உரிமையும் இந்நாட்டு மக்களுக்கே உரியது.

ஊழல், மோசடியில் ஈடுபடுவோரின் பிரஜாவுரிமையை ரத்து செய்வதற்கான சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்படுவது அவசியம்.

நாட்டில் காணப்படும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும் என கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டமை, ஒரு கண் துடைப்பாகும் எனவும் தலைவலிக்கு மருந்து எடுக்க வேண்டுமே தவிர தலைவலிக்கு தலையணையை மாற்றிசரிவராது. இது எமது எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் நடவடிக்கை ஆகாது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பு மறை மாவட்ட பேராயர் இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்–

காலி முகத்திடலில் இளம் சமுதாயத்தினரால் முன்னெடுக்கப்படும் நியாயமான போராட்டத்தை ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் அடிபணியச் செய்வதற்கு முயற்சி எடுப்பார்களாயின், அது முழு நாட்டு மக்களையும் தாக்குகின்ற சம்பவமாகவே நான் பார்க்கின்றேன்.

தான்தோன்றித்தனமாக செயற்பட்டு நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் கொள்கைகளை இல்லாதொழிக்க வேண்டும். ஜனநாயகத்தை அடிபணியச் செய்யும் இந்த அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளை எங்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆள் பலம் மற்றும் ஆயுத பலம் போன்றவற்றைக் கொண்டு காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் போராட்டத்தை ஒழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதாரநெருக்கடியால் சிக்கித் தவிக்கும் மக்களின் குரலுக்கு செவி சாய்க்காது, அரசாங்கம் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருவதை ஏற்க முடியாது.

மக்களின் குரலுக்கு செவி சாய்ப்பது அவர்களின் பொறுப்பாகும். பொருளாதார நெருக்கடி எனும் வலையில் சிக்கியுள்ள நாட்டை மீட்டெடுப்பதற்கு சகல கட்சித் தலைவர்களும், மக்களும் இன, மத, சாதி, பேதங்களை மறந்து ஒன்றாகச் செயற்பட வேண்டியது அவசியம்.

நாட்டின் நீதித்துறை உயர்ந்ததாகக் காணப்பட வேண்டுமே தவிர, அரசியல் தலைவர்கள் அல்லர். நீதித்துறை எந்த வித இடையூறுகளும் இன்றி சுயாதீனமாக செயற்பட வேண்டிய சட்ட திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். நீதித்துறை சுயாதீனமாக இயங்குவதற்கான சட்டங்களை ஏற்படுத்துவது அவசியமாகும்.

தற்போது அரசாங்கத்திலுள்ள சகலரும் பதவி விலகி இடைக்கால அரசாங்கமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என பௌத்த மதத் தலைவர்கள் விடுத்திருந்த வேண்டுகோளையும் இந்த ஆட்சியாளர்கள் செவி சாய்க்காது செயற்பட்டு வருகின்றனர். – என்றார்.

# பிரச்சினைக்கு தீர்வு நடவடிக்கைகளை அரசு தற்போது முன்னெடுத்துள்ளதாம்!

## கூறுகிறார் பிரதமர் மஹிந்த



மக்களை முன்னிலைப்படுத்தி ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் சூழ்ச்சி தொடர்பாகப் பொது மக்கள் தெளிவுடன் அவதானம் செலுத்த வேண்டும். சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இறந்த காலம் மற்றும் சட்டம் தொடர்பில் தெளிவில்லாமல் இளம் தலைமுறையினரை ஒன்றிணைத்து ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுத்து வரும் போராட்டம் நாடுதழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டால் அதுநாட்டைமீண்டும் அழிவு பாதைக்கு கொண்டு செல்லும் என சட்டத்தரணிகள் பிரதமரிடம் எடுத்துரைத்தனர்.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் சட்டத்தரணிகளுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று (திங்கட்கிழமை) அலரிமாளிகையில் இடம்பெற்றது. அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களால் நாட்டிற்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக இந்தச்சந்திப்பின் போது அவதானம் செலுத்தப்பட்டது.

அரசமைப்பிற்கு அமைய ஜனாதிபதியை பதவி நீக்க முடியாது. அரசமைப்பு தொடர்பில் தெளிவான விளக்கம் இன்மை, நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி திட்டமிடப்பட்ட ஒரு தரப்பினர் தற்போதைய போராட்டங்களை முன்னெடுத்து செல்வதை சட்டத்தரணிகள் இந்தச்சந்திப்பின் போது சுட்டிக்காட்டினர்.

1988 மற்றும் 1989ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அப்போதைய அரச தலைவர் ஜே.ஆர் ஜெயவர்தனாவை கொலை செய்ய வேண்டும் என குறிப்பிட்டுக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டம் இறுதியில் முழு நாட்டுக்கும் பாரிய அழிவை ஏற்படுத்தியது.

இறந்த காலம் மற்றும் சட்டம் தொடர்பில் தெளிவில்லாமல் இளம் தலைமுறையினரை ஒன்றிணைத்து ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுத்து வரும் போராட்டம் நாடுதழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டால் அது நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கு கொண்டு செல்லும் நிலைமையை உருவாக்கும்.

சாதாரண மக்கள் தற்போதைய போராட்டங்களுக்கு நிதியுதவி மற்றும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வில்லை.

திட்டமிட்ட வகையில் ஒரு தரப்பினர் நிதியுதவி வழங்கி போராட்டத்தை தீவிரப்படுத்தி நாட்டை நிர்மூலமாக்க முயற்சிக்கின்றனர். நாட்டை அழிவிற்கு கொண்டு செல்லும் போராட்டங்களுக்கு ஊடகங்கள் தெரிந்தோ அல்லது தெரியாமலோ ஆதரவு வழங்கக் கூடாது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்கள் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் பொது மக்களை கருவியாகப் பயன்படுத்தி அரசாங்கத்தை பலவீனப்படுத்தி, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை பதவி நீக்கி அவர்களின் குறுகிய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். உண்மை காரணிகளை நாட்டு மக்கள் தெளிவுடன் விளங்கிக்கொள்ள வேண்டும் என சட்டத்தரணிகள் பிரதமரிடம் எடுத்துரைத்தனர்.

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளது. மக்களை முன்னிலைப்படுத்தி ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் சூழ்ச்சி குறித்து பொது மக்கள் தெளிவுடன் அவதானம் செலுத்த வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறோம். – என்றார்.

# உணவுப் பொதி விலையும் 20 வீதத்தால் எகிறுகிறது

உணவுப்பொதிகளின் விலைகள் 20 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

உணவுப்பொதிகள் மற்றும் இதர உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கும், விநியோகிப்பதற்கும் பெரும்பாலும் ஓட்டோக்கள் மற்றும் மினிட்ரக்கள்பயன்படுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அது நிச்சயமாக போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்க வழியேற்படுத்தும்.

போக்குவரத்து கட்டண அதிகரிப்பு நேரடியாக எம்மைப் பாதிக்கும். எனவே, உணவுப்பொதிகளின் விலை எவ்வளவு என்று எங்களால் கூற முடியாது.

ஆனால் ஒரு முன்முயற்சி நடவடிக்கையாக, உணவுப்பொதிகளின் விலையை 20 சதவீதத்தால் உயர்த்த முடிவு செய்துள்ளோம் என அவர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கையின் பல பகுதிகளில் உணவுப்பொதிகளின் விலை பாரியளவில் அதிகரித்திருந்த நிலையில் மீண்டும் விலை அதிகரிப்பு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு உணவுப்பொதிகளை கொள்வனவு செய்வோருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் என சமூக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## காலிமுகத்திடலில் போராட்டம் நடத்துவோர்

# நாடாளுமன்றுக்கும் வரலாமென்கிறார் ரணில்



புதிய அமைச்சவையில் நான்கு அமைச்சர்கள் இன்று நாடாளுமன்றுக்கு வரவில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று அவர் இன்று நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளார்

ஜனாதிபதிக்கு 20 ஆவது அரசமைப்பின்படி செயற்படமுடியாது அவர் 19 ஆவது திருத்தத்தின் கீழேயே பதவியில் அமர்த்தப்பட்டார் என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

எனவே19ஆவதுஅரசமைப்பு திருத்தத்தில் கீழ் செயற்பட முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார். நாடாளுமன்றத்தின் அனுமதியில்லாமல் மத்திய வங்கி நாணய அச்சிடும் முறையை நிறுத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இன்று நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு நாடாளுமன்றத்தின் மூலம் தீர்வுக்காணப்படவேண்டும். இல்லையேல் போராட்டம் நடத்துவோர் நாடாளுமன்றத்துக்கு எதிராகவும் போராட்டம் நடத்துவர் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தும் இளைஞர்கள் அரசியலமைப்பின் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்று கோருகின்றனர்.

அதற்கு செவிமடுக்கப்படவேண்டும் என்றும்ரணில்விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.